# உலகம் வாழ்வது யாரால்?

கதை: இ.ஜே.சுந்தர்
ஓவியம்: ஷேக்







கடற்பயணத்தில் உணவு பரிமாறும் நேரம்
வழுதி:
இந்திரனுக்குரிய அமுதமாயினும் சரி-
அனைவருக்கும் இதே போல
அறுசுவை உனவை வழங்குங்கள்.
பகிர்ந்துண்போம்
சமையல்காரர்:
இளவரசே! உங்களுக்கு
அறுசுவை உணவு
தனியாகத்
தயாரித்திருக்கிறேன்.
வாருங்கள்!
வணிகர்:
உங்கள் பகிரந்துண்ணும்
பண்பை நாங்களும்
கற்கவேண்டும்.
3


வழுதி:
இது சான்றோர் பலரிடம்
நான் கற்ற பண்பு.
வணிகத் தலைவர்:
நீங்கள் கற்றதை
எங்களுக்கும் சொல்லுங்கள்.
கடைப்பிடிக்க முயல்கிறோம்.
4
வழுதி:
சினம் கொள்ளாதீர்.
சோம்பலைவிரட்டுங்கள்.
அஞ்சவேண்டுவதற்கு
அஞ்சுங்கள்.
வணிகர்:
தமிழர் அனைவருக்கும்
தேவையான அறிவுரை.
நீங்கள் பார்த்த சான்றோர்
எப்படிப்பட்டோர்?
வழுதி:
புகழ் எனில் உயிரையும்
கொடுப்பர். பழி என்றால்
உலகமே கிடைத்தாலும்
மறுப்பர். எத்துன்பத்திலும்
மனம் தளரவேமாட்டார்.


வணிகர்:
இப்பண்புகள் வளர்ந்தால்
நாமும் வளர்வோம்.
நாடும் வளருமே.
வணிகத் தலைவர்:
இந்த உலகம் பல
இன்னல்களிடையே இன்னும்
வாழ்ந்துகொண்டிருக்கிறதே
அது எப்படி?
வழுதி:
தமக்கெனவாழாமல்
பிறர்க்கென வாழும் சிலர்
இருப்பதால் தான் இன்னும்
இந்த உலகம்
இயங்கிக்கொண்டிருக்கிறது.
வணிகர்:
நீங்கள் கூறியவை
ஓலையிலும் மனதிலும்
பதிவுசெய்யவேண்டியவை
வழுதி:
ஒரு பாடலாகஇந்தத்
துணியில் எழுதியே
விடுகிறேன்.
5


வணிகர்: ஐயோ!
கடற்கொள்ளையர்
கப்பலைத்தாக்க
வருகின்றனர்
பாருங்கள்.
6
வழுதி:
வீரர்களே அவர்கள்
நம் கப்பலைத் தாக்க
வருவதற்கு முன்
சிறு படகுகளில்
பின்புறமாகச்சென்று
தீயிட்ட அம்புகளை
வீசுவோம்வாருங்கள்.
கடற்கொள்ளையர் கப்பல் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிறது.
ஆனால் தீ வழுதியின்படகிலும்பற்றுகிறது.
7


வழுதி:
உங்கள் படகுகளுக்குத் தீபரவாமல் விரைந்து முன்னேறுங்கள். நான் கடலில் குதித்துநீந்தி வருவேன்.
8
ஆனால் வழுதி கடலுள் மாய்ந்துபோனார். வணிகர்கள் வளைகுடாநகரச் சோனக வணிகர்களிடம் வாக்களித்தபடி முத்துக்குவியலையும்பிற பொருள்களையும் ஒப்படைத்துக் கொற்கை திரும்புகின்றனர், பாண்டிய மன்னரிடம் நடந்ததை விளக்குகின்றனர்.
பாண்டியன்:
என் மகன் பிறருக்காக வாழ்ந்து கடலுள்மாய்ந்தாலும் அவன் படைத்த கவிதை பலரை வாழவைக்கும். அடுத்த பயணத்தில் அவன் தீட்டியகவிதையை அவன் நினைவாகக் கப்பலில் பறக்கவிடுங்கள். கடல் கடந்தும் அவன் சொன்ன செய்தி பரவட்டும்.
9
அரேபியா
Muscat
Barbaricon
Calcutta
சீனா
Guangzhou
Pacific Ocean
Berenike
Aden
Kane
Arabian Sea
Barygaza
இந்தியா
கொற்கை
Bay of Bengal
South China Sea
சோமாலியா
ஜாவா
10
உண்டால்அம்ம, இவ்வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும், இனிதுஎனத்
தமியர்உண்டலும்இலரே; முனிவிலர்;
துஞ்சலும்இலர்; பிறர் அஞ்சுவதுஅஞ்சிப்.
புகழ்எனின்,
உயிருங்கொடுக்குவர்; பழியெனின்,
உலகுடன்பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையராகித்,
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (புறம்:182)
கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி
11